313


# தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 19-4-58 | சனிக்கிழமை | இதழ் 40


## உப தேர்தல்கள்

ஆளும் கட்சிக்கு இதுநான்காவது தோல்வி. அண்மைக்காலத்தில் நடைபெற்ற இடைத் தேர்தல்கள் நான்கிலும் சர்க்கார் கட்சி தோல்வியுற்று, எதிர்க் கட்சிகள் வெற்றிபெற்றுள்ளன. இரண்டுமாதத்தில் இது மூன்ருவது தோல்வி. 1955-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடைபெற்ற உபதேர்தல்களில் இது நான்காவது தோல்வி, சர்க்கார் கட்சிக்கு.

இங்கல்ல!

இங்கிலாந்தில்!!

அதுமட்டுமா?

தொழிற்கட்சி சரியான முறையில் சிறந்ததொரு எதிர்க்கட்சியாக விளங்கவில்லை என்பதை எடுத்துக்காட்ட வேண்டி, இப்போதைய உபதேர்தலில் தொழிற்கட்சி—எதிர்க்கட்சி—யைத் தேர்ந்தெடுக்காமல் மிதவாதி (liberal) கட்சி அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்! 29ஆண்டுகளாகப் பாராளுமன்றத்தில் வெற்றிபெருத ஒரு கட்சியைத் தேர்ந்தெடுத்ததன் மூலம்—

ஆளுகின்ற கன்சர்வேடிவ் கட்சி சரியான முறையிலே நாட்டை ஆளவில்லை என்பதைக் காட்டியதோடு—

சர்க்கார் கட்சி செய்த தவறுகளையும், குறைகளையும் எடுத்துக்காட்டி நல்லதொரு எதிர்க் கட்சியாக தொழிற்கட்சி விளங்கவில்லை என்பதையும் காட்டியுள்ளார்கள், இத்துணைத் தேர்தல் மூலம்!

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிப்பதுபோல்—அண்மையில்டார்ரிங்டன்டெவன் என்ற ஊரில் மார்ச்மாதம் 28ந் தேதி நடைபெற்ற துணைத்தேர்தலில் ஆங்கிலப் பெருமக்கள் அந்தோணிராயல் என்ற கன்சர்வேடிவ் அங்கத்தினரையும், லியனூர்ட்லாம்ப் என்ற தொழிற்கட்சி அங்கத்தினரையும் தூக்கிஎறிந்துவிட்டு, மார்க்பான்ஹாம் கார்டெர் என்ற மிதவாதியைத் தேர்ந்தெடுத்தனர். இதன்மூலம் நாட்டிலே ஏற்பட்டுள்ள மனக் கசப்பை வெளிப்படுத்தியுள்ளதாகப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் பிரமாதமாகத் தலைப்புக் கொடுத்து இச் செய்தியை வெளியிட்டுள்ளன.

சாதாரணமாகத் துணைத் தேர்தல்களில் பொதுத் தேர்தலை விடக் குறைவான வாக்காளர்களே வாக்குப்பதிவு செய்வது வழக்கம். நம் நாட்டில் மட்டுமல்ல, எந்த நாட்டிலும். ஆனல் டார்ரிங்டன்டெவனில் நடைபெற்ற இந்த இடைத்தேர்தலில் 79,98 சதவிகிதம் வாக்குப் பதிவாகியுள்ளது! இதே தொகுதியில் பொதுத் தேர்தலின்போது 69.18 சதவிகிதமே பதிவாகியுள்ளது. எதிர்பார்த்ததைவிட அதிகமான வாக்குகள் பதிவாகி உள்ளன, ஓர் இடைத் தேர்தலில்!

காரணம் ஆளுகின்றகட்சியின் கொள்கையில் ஏற்பட்ட மனமாற்றம். எதிர்க்கட்சி சரியாகப் பணியாற்றவில்லை என்பதைக் காட்டவேண்டி இடைத் தேர்தலின்போது சுறுசுறுப்பாக வாக்காளர்கள் வோட்டுச் சாவடிக்குச் சென்று தங்கள் கடமையைச் செய்தனர். பொதுத் தேர்தலின்போது பதிவான வாக்குகளில் 65.05 சதவிகிதம் பெற்ற சர்க்கார் கட்சி இந்த இடைத் தேர்தலில் 37.99 சதவிகிதமே பெற்றது என்ருல்---பொதுத் தேர்தலில் 34.95 சதவிகிதம் வாக்குகள் பெற்ற தொழிற்கட்சி 24.64 சதவிகிதமேபெற்றதென்ருல்... அக்கட்சிகளின் செல்வாக்கு எவ்வளவுதூரம்குறைந்துவிட்டது என்பதைக் கூறவும் வேண்டுமா என்று கேட்பதுபோல் அத்தொகுதி வாசிகள் ஒரு மிதவாதியைத் தேர்ந்தெடுத்தனர்; அதன்மூலம் ஆளுகின்ற கட்சி, எதிர்க்கட்சி இரண்டுக்கும் அதிர்ச்சி கொடுத்துள்ளனர்.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பொதுத்தேர்தல்கள் நடப்பது வழக்கம். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் இறந்துவிட்டாலோ, அல்லது அவர்கள் தேர்தல் செல்லுபடி ஆகாது என்று நீதிமன்றம், அல்லது தேர்தல் குழு தீர்ப்பளித்து விட்டாலோ, அல்லது வேறு சில காரணங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ராஜிநாமா செய்துவிட்டாலோ, இடைத் தேர்தல்கள் நடைபெறுவதுண்டு. பொதுவாக சர்க்கார் கட்சியினரே இத்தகைய தேர்தல்களில் வெற்றி பெறுவது வழக்கம். ஆனல் சர்க்கார் சரியாக ஆட்சி நடத்தாத நாட்டில் துணைத்தேர்தல்களில் ஆளும் கட்சி அங்கத்தினர்களைத் தோற்கடிப்பதன்மூலம், அவர்களுக்குப் பாடம் கற்பிக்க வசதி ஏற்படுகிறது. அதை இங்கிலாந்து நாட்டுப் பெருமக்கள் நடைமுறையில் செய்து காட்டியுள்ளார்கள்.

பொதுத்தேர்தல் காலத்திலேயே தூங்கிவழியும் நம்நாட்டு வாக்காளர்கள்---நாம் ஒருவர் வாக்குச்சாவடிக்குச் செல்லாவிட்டால் என்ன, குடிமுழுகிப் போய்விடாது என்ற மனப்பான்மையில் முழுகிக்கிடக்கும் நம் நாட்டுப் பெருமக்கள்---இடைத் தேர்தல்களில் முழுக்க முழுக்கத் தூங்குவதில் வியப்பில்லை அல்லவா? அண்மையிலே சென்னை மேல் சபைக்கு ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து நடைபெற்ற ஒரு துணைத் தேர்தலில் மிகமிகக் குறைவான வாக்குகளே பதிவாகியதை இதற்குள் யார் மறந்திருக்க முடியும்? ஆசிரியர்கள்; இந்த நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குபவர்கள்! ஒரு நாள் விடுமுறை விட்டபிறகு வோட்டுச்சாவடிக்குச் சென்று தங்கள் பொன்னுன வாக்குகளைப் போடத்தவறிவிட்டார்கள் பெரும்பாலோர்!

அண்மையிலே திருவாடானைத் தொகுதியிலே நடைபெற்ற துணைத்தேர்தலிலும் ஐம்பது சதவிகித வாக்குகளே பதிவாகின. அத்தொகுதி வாக்காளர்கள், ஜனநாயகக் காங்கிரஸ் அங்கத்தினரையும், தி. மு. க. அங்கத்தினரையும் ஒதுக்கிவிட்டுக் காங்கிரஸ்வாதியைத் தேர்ந்தெடுத்தார்கள். ஏனையோர்—வாக்குரிமை பெற்ற பலர்—வோட்டுச் சாவடிக்கே செல்லவில்லை. நாம் வாக்குப் போடாவிட்டால் என்ன, என்ற மனப்பான்மையில் பலர் தங்கள் கடமையில் தவறிவிட்டார்கள். இடைத் தேர்தல்களின் போதுதான் அதிகமான சுறுசுறுப்போடு வேலை செய்து, சர்க்கார் கட்சியினர் செய்த தவறுகளைச் சுட்டுக் காட்டுவதற்காக, எதிர்க்கட்சி அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

— 6-ம் பக்கம் —

22 APR 1958 MADRAS
198380

# மேன்மக்கள் மேன்மக்களே!

செந்தமிழ் பயிலும் செல்வக் குழந்தைகளே! இன்று குடத்தைப்பற்றிய ஆராய்ச்சி. 'படம்' 'பட்டம்' படிக்கும்போதே நம் குழந்தைகள் 'குடம்' என்னும் சொல்லையும் படித்திருப்பார்கள். நீர்க்குடம் எடுத்துச் செல்லும் பெண்களைச் சிற்றூர்களில் காண முடியும். குடிக்கும் நீரை நம் வீட்டில் பித்தளைக் குடங்களில் நிரப்பி வைத்திருப்பார்கள்.

திறந்தால் தண்ணீர் வரும் குழாய், ஐஸ்பெட்டி முதலியவை மிகுந்துவிட்ட இக்காலத்தில் குடத்தில் தண்ணீர் நிரப்பிவைத்துக்கொண்டு யார் குடிக்கிறார்கள்? வகைவகையான சுவை நீரை விதம்விதமான சீசாக்களில் அடைத்துப் பெட்டிபெட்டியாக விற்கிற காலம் இது. சுவைநீர் வகைகள் இவ்வாறு மலிந்துவிட்டதால் வெறும் தண்ணீரை விரும்பிக் குடிப்பவர்கள் குறைந்துவிட்டனர். இந்நிலையில் நீர்க்குடம் இக்காலப் பிள்ளைகளுக்குப் புதுமையான பொருளாகவே இருக்கும்.

பானையில் தண்ணீரை ஊற்றிவைத்துக் குளிர்ந்த பின்னர்க் குடித்துப் பழக்கப்பட்டவர்களுக்கு 'ஐஸ்வாட்டர்' அவ்வளவு சுவையாக இராது. மலாயாவில் மட் குடத்தை—மண்பானையைக் காண்பதே அரிதாக இருக்கிறது. பொங்கலுக்குக்கூடப் பித்தளைப் பானையில் பொங்கல் வைக்கிறவர்கள் இங்கு அதிகம். ஆகவே மண்பானையைப் பற்றியும் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்ய வேண்டியிருக்கிறது.

மட்குடம், பித்தளைக்குடம், வெள்ளிக்குடம் பொற்குடம்—இப்படி எத்தனையோ குடங்கள் உண்டு.

மட்குடமும் பித்தளைக்குடமும் எளியவர்,வீட்டிலும் நடுத்தர வகுப்பினர் வீட்டிலும் காணப்படுபவை. வெள்ளிக் குடத்தையும் பொற்குடத்தையும் செல்வர்கள் வீட்டிலேயே காணமுடியும். கோவில் கும்பாபிஷேகங்களின் போது வெள்ளிக் குடம், பொற்குடங்களைப் பார்க்கலாம். கோபுரத்தில் தண்ணீர் சொரிவதற்கு வெள்ளிக் குடங்களையும் பொற்குடங்களையும் பரிசாக வழங்குவர்.

மண்ணாலான குடம் உடைந்துவிடுகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். பிறகு அந்த உடைந்த பானை எதற்கும் பயன்படாது. ஓட்டைப்பானையைத் திரும்பவும் ஒன்று சேர்க்க முடியாது. நேரே குப்பைமேட்டில் தூக்கி எறிய வேண்டியதுதான்! உடைந்த மட்குடத்தின் கதி இது!

பித்தளைக்குடம் உடைந்துவிடுகிறது. அல்லது நெளிந்துவிடுகிறது. நெளிவைப் பழுதுபார்த்தும் ஓட்டையை அடைத்தும் பித்தளைக்குடத்தைத் தொடர்ந்து பயன்படுத்த முடியும். அப்படி அது தேய்ந்து உரு மாறிப்போனாலும், 'ஓட்டை உடைசல் ஈயம் பித்தளை' என்று கூறிவரும் பேரீச்சம்பழக்காரனிடமாவது அதனை விற்றுவிடலாம். மட்குடத்தைப் போன்றதன்று, பித்தளைக்குடம். உடைந்த பிறகும் அதற்கு ஓரளவு மதிப்பிருக்கிறது. அதனைக்கொண்டு பேரீச்சம் பழமாவது வாங்கமுடியும். இது பித்தளைக்குடத்தின் நிலை.

வெள்ளிக்குடமும் பொற்குடமும் எப்படி? அவை உடைந்துவிட்டால், ஓட்டையாகிவிட்டால், அவற்றின் மதிப்பு குறைந்துவிடுமா? குடம் செய்கின்ற கூலி




அளவுக்கு மதிப்புக் குறையுமே ஒழிய அவற்றின் மதிப்பு பெரும் பகுதி அப்படியே இருக்கும்; வெள்ளிக்குடம் உடைந்தால் மிஞ்சுவது வெள்ளி—அதற்கு நல்ல விலை உண்டு. அது போலவே தங்கக்குடம் உடைந்தால் மிஞ்சுவது தங்கம்—அதற்குத் தக்க விலை என்றும் உண்டு.

அதுமட்டுமன்று, உடைந்த வெள்ளியையும் தங்கத்தையும் கொண்டு மீண்டும் வெள்ளிக் குடத்தையும் உருவாக்கிவிடுவது எளிது.

பொன்னின் குடம் உடைந்தாலும் பொன்னாகவே இருக்கிறது. வெள்ளிக்குடமும் அவ்வாறுதான். ஆனால் மண்ணின் குடம் உடைந்தால் என்ன மிஞ்சும்? வெறும் ஓட்டை உடைசல் சில்லுகள். அவற்றுக்கு விலை மதிப்பில்லை.

குடமாக இருக்கும்போது மண்ணின் குடத்திற்கு விலை மதிப்பு இருக்கிறது. அது மக்களுக்குப் பயன்படுகிறது. உடைந்துவிட்டாலோ, அது மதிப்பற்று, பயனற்றுவிடுகிறது.

பொற்குடமோ உடையாத நிலையிலும் உடைந்த பின்னரும் மதிப்புடையது, பயனுடையது.

சீரியர் மேன்மக்கள் பொற்குடத்தைப் போன்றவர்கள் என்றும் செப்புகிறது மூதுரை. சீரியரல்லாத கீழ்மக்களை மட்குடத்தோடு சேர்த்துப் பேசுகிறது அது.

**சீரியர் கெட்டாலும் சீரியரே!**
**சீரியர்மற்(று)**
**அல்லாதார் கெட்டாலங்**
**கென்னாகும்--சீரிய**
**பொன்னின் குடமுடைந்தால்**
**பொன்னாகும் என்னாகும்**
**மண்ணின் குடமுடைந்தக்கால்**

(மூதுரை 18)

மேன்மக்கள், சீரிய குணமுள்ளவர்கள். வறுமையுற்றாலும் மேன்மைக் குணமுள்ளவர்களாகவே விளங்குவார்கள். கீழ்மக்களோ வறுமையுற்றால் ஒன்றுக்கும் உதவாதவராகிவிடுவர். பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகவே இருந்து பயன் தரும்; மண்ணின் குடமோ உடைந்தால் பயனற்றதாகிவிடும். இதுதான் ஔவையார் சொல்கிற கருத்து.

★

மேன்மக்களின் பண்பும் எக்காலத்திலும் மாறுதவை. தமிழ் நூல்களின் இக்கருத்து பல இடங்களிலும் வற்புறுத்தப்படுகிறது.

ஔவையார் மூதுரையிலேயே இன்னும் இரண்டு பாட்டுக்களை இக்கருத்தை வலியுறுத்தும் வண்ணம் தந்திருக்கிறார்.

''அட்டாலும் பால் சுவையில் குன்றாது'' என்று தொடங்கும் பாட்டு மேன்மக்களின் சிறப்பை விளக்குவதேயாகும். சங்கு சுட்டாலும் வெண்மை தருவது போல, அட்டாலும் பால் இனிமை பயப்பதுபோலக் கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்று அது திட்டவட்டமாக, ஆணித்தரமாகப் பேசுகிறது.

அந்தப் பாட்டையும் இப்பொழுதே நீங்கள் அறிந்து கொள்வது நன்று.

**அட்டாலும் பால்சுவையில்**
**குன்றாது--அளவளாய்**
**நட்டாலும் நண்பல்லார்**
**நண்பல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள்**
**மேன்மக்களே சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்.**

(மூதுரை 4)

மேன்மக்கள் பாலையும் சங்கையும் போன்றவர்கள். பாலை அடுப்பிலிட்டுக் காய்ச்சக்காய்ச்ச அதன் இனிமை பெருகுகிறதே ஒழியக் குறைவதில்லை. அது போலவே சங்கை நெருப்பிலிட்டுச் சுடச்சுட அதன் வெண்மை அதிகரிக்கவே செய்கிறது; குறைவதில்லை. மேன்மக்களும் வறுமையின் விளைவாகப் பண்பில் மாறிவிடுவதில்லை; அவர்கள் மேன்மைக் குணம் வறுமைக்காலத்தும் அப்படியே நீடித்து ஒளிவீசும்.

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்னும் இக்கருத்தைவலியுறுத்தும் மற்றொரு மூதுரைப்பாட்டையும் சொல்கிறேன்.

**சந்தன மென்குறடு தான்**
**தேய்ந்த காலத்தும்**
**சுந்தம் குறைபடா தாதலால்—**
**தந்தம்**
**தனஞ்சிறிய ராயினும்**
**தார்வேந்தர் கேட்டால்**
**மனஞ்சிறிய ராவரோ மற்று**

(மூதுரை 28)

இப் பாட்டு மேன்மக்களைச் சந்தனக்கட்டையோடு ஒப்பிடுகிறது. சந்தனக்கட்டை தேய்ந்துவிட்டாலும் அதன் மணம் குறையாது. அதுபோலவே அரசர்கள் தங்கள் செல்வம் சுருங்கிய காலத்தும் மனம் சுருங்கியவர்கள் ஆகார். செல்வக் குறைவால் அரசர்களின் மனவிரிவும் மனவலிமையும் ஊக்கமும் குறையாதென்பது, இப்பாட்டு சுட்டிக் காட்டும் உண்மையாகும்.

சீரியரைப்பற்றி ஒரு பாட்டு; மேன்மக்களைப்பற்றி மற்றொரு பாட்டு; தார்வேந்தரைப்பற்றி இன்னொரு பாட்டு.

சீரியர் கெட்டாலும் சீரியரே; கெட்டாலும் மேன்மக்கள் மேன மக்களே; வறுமையால் தார்வேந்தர் மனஞ்சிறியர் ஆகார்.

சீரியருக்கு உவமையாகப் பொற்குடமும், மேன்மக்களுக்குச் சான்றாகப் பாலும் சங்கும், தார்வேந்தருக்கு ஒப்புவமையாகச் சந்தனக் கட்டையும் மூதுரையில் காட்டப்படுகின்றன.

சீரியருக்குப் பொற்குடமும் கீழ்மக்களுக்கு மட்குடமும் அருமையான உவமைகள். ஔவையார் நாம் எண்ணி எண்ணி மகிழும் வண்ணம் அந்த உவமைகளைக் கையாண்டிருக்கிறார்.

'மண்ணின் குடம் உடைந்தால் என்னாகும்?' என்று அவர் கேட்கும் பொருள் பொதிந்த கேள்வியில்தான் எவ்வளவு கேலி தொக்கி நிற்கிறது!

— 7ம் பக்கம் —

## வெண்பாப் போட்டி-16.

ஈற்றடி :

எழுவாய் எழுவாய் இனி.

முடிவு தேதி 3-5-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

''போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !''

# எண்ணம்

மலர் 4 ‖ 19—4—58 ‖ இதழ் 40

## 'குப்பி, கோயிலுக்குப் போகலாம் வா!'

சட்டமன்ற நிகழ்ச்சிகள் வர வரச் சுவை மிகுதியாகப் பெற்று வருகின்றன.

கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் 'கனம்' அமைச்சர்களை 'கிளித் தட்டு' விளையாட வைக்கிறார்கள். ஒரு பக்கம் அன்பழகன், இன்னொரு பக்கம் கோவிந்தசாமி வேறொரு பக்கம் ஆசைத்தம்பி—இப்படி மூலைக்கு மூலை அமைச்சர்களை வழிமறித்து நமது சட்டமன்ற உறுப்பினர்கள் கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்கள். இதற்கிடையில் தலைவர் அண்ணா அவர்கள் திடீரென்று 'கிளி வருகிறது கிளி வருகிறது' என்று பாடிக்கொண்டு புகுந்துவிடுகிறார்கள். ஆடுவது கிளித்தட்டு ஆட்டம்; பாடி வருவதோ கிளிதான் என்றாலும், அவர்களுக்கு அது புலியாகவே தோன்றுகிறது மிரளுகிறார்கள். அண்ணாந்து பார்க்கிறார்கள். ஆயிரம்—பதினாயிரம் விழிகள்; கீழ் நோக்கி எரிந்து கொண்டிருப்பது அவர்களுக்கு மேலும் பீதியை வளர்க்கிறது. மவுண்ட்ரோட்டிலே இருந்த சட்டமன்றத்தைக் கோட்டைக்கு ஏன் மாற்றினோம்; உதக மண்டலத்திற்கே மாற்றியிருக்கலாமே'' என்று இப்போது உணருகிறார்கள்.

—இவ்வாறு தமிழ்நாட்டின் சட்டமன்றம் தினம் தினம் செத்துப் பிழைக்கிறது.

இந்தப் பேராபத்தைப் போக்கிக்கொள்வதற்காக சென்னை அமைச்சர்கள் பொதுமக்களைச் சந்தித்து தி. மு. கழகத்தைப்பற்றிப் பொய்ப் பிரச்சாரம் செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

திடீரென்று ஒரு கூட்டத்தைப் போட்டு அமைச்சர்கள் பேசுகிறார்கள். ''தி. மு. கழகத்தினிடம் திட்டம் என்ன இருக்கிறது. சொல்லட்டும் நாங்கள் நிறைவேற்றுகிறோம்'' என்கிறார்கள். தி. மு. கழகம் சட்டமன்றம் போன பிறகு, பல திட்டங்களையும், பல யோசனைகளையும் கழக உறுப்பினர்கள் அரசியலாருக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

திட்டம் கேட்கிறார்கள்; திட்டத்தைச் சொன்னால், 'இதற்குப் பணத்திற்கு எங்கே போவது' என்கிறார்கள். திட்டத்தையும் சொல்லி, அதற்கான பணத்தையும் கழகம்தான் காட்ட வேண்டுமென்றால், காங்கிரஸ் கட்சியும், அதன் மந்திரிகளும் ஏன் தான் சட்டமன்றத்திற்கு வர வேண்டும்? திட்டத்தையும், பணத்தையும் பெற்றுக்கொண்டு கையெழுத்துப் போடும் மணியம் வேலைக்கு இத்தனை அமைச்சர்களும், இவர்களுக்கு அகவல் பாடுவதற்கு நூற்றிஐம்பது அங்கத்தினர்களும் தேவைதானா? இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் எல்லாப் பொதுக் கூட்டங்களிலும் கேட்கிறார்கள். இதற்கு இதுவரை அமைச்சர்களிடமிருந்து எந்தவிதப் பதிலும் வரவில்லை. 'திட்டமெங்கே? திட்டமெங்கே?' என்றுதான் இன்னும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் 16-4-58ம் தேதியன்று சென்னை—கன்னியப்ப நகரில் நடந்த கூட்டத்தில் இதற்குத் தெளிவான பதிலை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லிவிட்டார்கள்.

**'திட்டமென்ன திட்டமென்ன? என்றால் திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும் என்பதுதான் எங்கள் திட்டம். இந்தத் திட்டத்தில் எல்லாத் திட்டங்களும் அடங்கியிருக்கின்றன. எங்களது பிரிவினைத் திட்டத்தை அணுகி ஆராய்ந்தால் அதிலடங்கிக் கிடக்கும் திட்டங்கள் புலப்படும்'** என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்கள்.

அண்ணா அவர்கள் அமைச்சர்களுக்கு இதை உணர்த்துவதற்காக பொருள் நிறைந்ததோர் உதாரணத்தையும் சொல்லி வைத்தார்கள்.

**'குப்பி கோயிலுக்குப் போகலாம், வா !'** என்று மனைவியைக் கணவன் அழைத்தால் அதில் பல வேலைகள் அடங்கியிருக்கின்றன.

'பட்டுப் புடவை கட்டிக்கொள் !'

'நெற்றிக்குத் திலகமிட்டுக்கொள் !'

'குழந்தையைத் தூங்க வைத்துவிட்டு வா !

'தேங்காய் பழம் வாங்கிக்கொள் !'

'தட்சிணைக்குக் காசு கொண்டு வா !'

—'குப்பி கோயிலுக்குப் போகலாம் வா' என்றால் இத்தனை காரியங்களும் அடங்கியது என்று அண்ணா அவர்கள் விளக்கம் தந்தார்கள்.

இவைகளில் எதையும் செய்யாமல், கணவன் அழைத்ததும் அவனைத் தொடர்ந்தே குப்பி கோயிலுக்குப் போவாளானால் அந்தக் குப்பிக்கும் இந்தக் கோணங்கி அமைச்சர்களுக்கும் என்ன வேறுபாடு?

## காதலியின் உயிர்

*அன்புள்ள அத்தான் !*

*கடிதம் வரும், என் கவலை திரும் என்றெல்லாம் எண்ணி ஏமாந்து போன பிறகு எழுதும் கடைசிக் கடிதம், கல்லாகிப் போன உங்கள் இதயக் கதவுகளைத் திறக்கச் செய்யும். இறுதி முயற்சி படியுங்களத்தான், படியுங்கள்.*

*நீங்கள் எழுத்தாளர்; உங்களைப் போல வார்த்தை ஜாலங்காட்டி என்னால் எழுதமுடியாது. ஆனால் திறந்த நெஞ்சத்தோடு- தெளிந்த இதயத்தோடு எழுதுகிறேன். நாமிருவரும் அருகருகே வாழ்ந்தபோது என்னிதயத்திலே ஆசைக் கனவுகளை எழுப்பிவிட்டு, நான் கற்பனைக் கோட்டை கட்டி அதை ஆள நினைக்கும்போது என்னை மறந்துவிட்டுக் கண்களைப் புனலூற்றச் செய்கிறீர்களே ! இது நியாயமா அத்தான்?*

*அன்றொரு நாள், அப்பாஎங்கோ சென்றிருந்தார். தாயற்ற பெண் நான், பள்ளியிலிருந்து வந்தபோது, கதவைத் திறந்துவிட்டுப் புத்தகங்களை வாங்குவதைப்போல என் கைகளைப் பிடித்துக்கொண்டீர்கள். நான் மீறிக்கொண்டு - கரங்களைப் பிடுங்கிக்கொண்டு ஓட முயற்சித்தேன்; நீங்கள் பலமாகப் பிடித்துக் கொண்டதால் கையிலிருந்த இரண்டு கண்ணாடி வளையல்கள் உடைந்து கைகளைக் கிறிவிட்டன. கையில் இரத்தத்தைக் கண்டவுடன் கோபிப்பேன் எனப் பயந்து நின்றுவிட்டீர்கள். நான் நினைத்துநினைத்து மகிழ்ந்தேன். நீங்கள் கரம் பிடித்ததை நாணம் தடுத்தாலும் இதயம் விரும்பியது அத்தான். தனிமையில் கரம்பற்றியவர், பலர் முன்னிலையிலும் துணிவுடன் கைப்பிடிப்பார் என நினைத்திருந்தேன். என் ஆசையெல்லாம் வீணா? நீங்கள் கொண்டிருந்த காதலெல்லாம் பொய்யா?*

*''பெண்களின் இதயம் கண்ணாடி வளையல் போன்றது. ஒடிந்து உடையுமேயன்றிப் பொன்போல வளைந்து கொடுக்காது. கொண்ட காதலை, சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி, சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி மாற்றிக்கொள்ளாது'' என்று உங்கள் கதைகளில் பெண்களின் முன்னேற்றம்பற்றி எழுதுகிறீர்கள். தலைவனைப் பிரிந்த தலைவி படும் வேதனையை—அவள் மேனியிலே படர்ந்து வரும் பசலையைப்பற்றி எழுதி நெக்குருகச் செய்கிறீர்கள். வாழ்க்கைக் கதையில் என்னுடைய உள்ளக் கொதிப்பை—தவிப்பை உணர மறுப்பது ஏனத்தான்?*

*புது ஆடையை அணியும்போது மகிழ்ச்சியுடன் அணிகிறோம். அழுக்கடைந்தவுடன் வேறு ஆடையை— புது ஆடையின் சிறப்பெல்லாம் மறந்துவிட்டு அணிந்துகொள்வது போலத்தானா ஆண்களின் காதல்? ஏனத்தான் என் வாழ்வைப்பற்றிக் கவலைப்படமாட்டேன் என்கிறீர்கள்?*

*அத்தான் ! சென்றாலும் சென்றீர், என் சிந்தை கொண்டு சென்றீர் ! தந்துவிடும் எண்ணமெலாம், வந்ததுதான், விந்தையத்தான் ! தந்தாலும் கொள்ளத் தமிழ்ப்பெண் நான் ஒப்புவெனோ? வேண்டாம் என் அத்தான் நீர், விழலுக்கிறைக்காதிர். வாசமலர் மாலைதனை மந்தியிடம் தந்திடாதீர் !*

*மாமா உங்களைக் கேட்டபோது ''இப்பொழுது மணம் எனக்குத் தேவையில்லை. பிரேமாவை மணம் செய்து கொடுத்துவிடுங்கள்'' என்று சொல்லும் துணிவு—இதயத்தைப் புறக்கணித்துச் சொல்ல எப்படியத்தான் முடிந்தது? பெண்ணென்றால் பேயும் இரங்குமென்பார்கள். உணர்ச்சிகளைப் படம் பிடிக்கும் எழுத்தாளரான உங்களாலேயே முடியாதபோது பேய் என்ற ஒன்று இருந்தால்—அது எப்படியத்தான் இரங்கப் போகிறது?*

*ஏன் அத்தான் இப்பொழுது என்னை மறந்துவிட்டீர்கள்? ஏழை என்றா? ஏழை என்பதற்காகவென்றால் நாங்கள் ஏழை என்பது முன்னரே தெரியும். எழிலற்றவள் என்பதற்காகவும் புறக்கணிக்க முடியாது. உங்கள் வார்த்தை அடுக்குகளில் மயங்கி இன்னும் எண்ணி எண்ணி ஏங்குகிறேன் என்றால் உங்கள் வர்ணனைகள் சாதாரணமா? உங்களின் வர்ணனை உங்களையே ஏமாற்றமுடியாது? பின் ஏனத்தான் என்னை மணக்க ஒப்பவில்லை?*

*அத்தான் ! நீங்கள் விரைவில் ஒரு முடிவுக்கு வாருங்கள். அந்த முடிவு உங்களைப் ''பாரி''யாக்கட்டும்; வாடும் இம்முல்லைக்கொடிக்கு உங்கள் இதயத்தேரைத் தருவதாக அமையட்டும். நீங்கள் மணமாலையைக் கையில் எடுத்துக்கொள்ளப் போகிறீர்களா? இல்லை, என் மரண ஓலையைப் படிக்கத் தயாராக இருக்கிறீர்களா? அத்தான் ! எது அத்தான் உங்கள் ஆசை?*

*உங்கள் முடிவை உடன் வரைக ! எனக்கு உயிர் தருக !* **''பிரேமா''**

**—ப. முல்லைவழுதி**




எங்கும் கிடைக்கும்

# குஞ்சரத்தின் கதை

எஸ்.எஸ்.தென்னரசு

## 9

அருமை மகள் கண்ணம்மாவைக் காணாமல் அவள் தந்தை துடித்தார். கோடிப் பொன் களவுபோனாலும் தமிழர்கள் ஆறுதல் பெறுவார்கள். ஆனால் ஓடிப்போன பெண்ணை நினைத்து ஆறுதல் பெறமுடியுமா? இதுவோ விசித்திரக் களவு! வீட்டுக்குள்ளேயே திருடன்! யாரிடம் சொல்லி, யார் ஆறுதல் பெறுவது?

அடுப்பில் பூனை தூங்கியது. அடுத்த வீட்டுக்காரர்களுக்குக்கூட செய்தியைத் தெரியவிடாமல் அலை மோதிக் கிடந்தார்கள் கண்ணம்மாவின் பெற்றோர்கள்.

★

பொழுது புலர்ந்ததும் கண்ணம்மா தான் பஞ்சவர்ணத்தை எழுப்புவது வழக்கம். கதிரவன் உதிக்கும் முன்னமேயே அந்தக் காதலர்களிடையே சரசம் துவங்கிவிடும். பஞ்சவர்ணம் நன்றாகத் தூங்கிக்கொண்டிருப்பான். கண்ணம்மா முதலில் போர்வையை எடுப்பாள். பின் தட்டி எழுப்புவாள். முடிவாகத் தலையணையை இழுப்பாள்.

தூக்கத்திற்கும் வெறி உண்டு என்கிறார்கள். உண்மைதான். வெறியில் வித்தியாசம் இல்லையா?

கள் குடித்ததும் இருதயம் குழம்புகிறது. பண்பும், முறையும் பாழாகின்றன. அன்னையும் பிதாவும் அன்புள்ள நண்பர்களும்கூட அந்நியர்களாகப்படுகிறார்கள். கள்ளின்போதை தானாகத் தணியுமே தவிர தாட்சண்யத்திற்குத் தணியாது. ஆனால் தூக்க போதை முற்றிலும் மாறுபட்டது. தவழும் குழந்தை எழுந்து நடமாட முயலும்போது ஏற்படும் தடுமாற்றத்தைப்போல் சோர்வுற்றுத் தூங்கிக்கொண்டிருக்கும் இதயம், விழித்து உணர்வுபெறும்போது திடுக்கிட்டுத் தடுமாடுகிறது. எழுப்புகிறவர்கள்மீது கோபம் வருகிறது. ஆனால் அந்தக் கோபம் குடிகாரனின் கோபத்தைப்போல் எவருக்கும் அடங்காத கோபமல்ல; தூங்குவது பாலகனாக இருந்தால் அவனது கோபம், அவனை எழுப்பும் ஆசிரியனுக்குக் கட்டுப்படுகிறது; தூங்குவது மனைவியாக இருந்தால் அவளது தடுமாற்றம், அவளை எழுப்பும் கணவனுக்குக் கட்டுப்படுகிறது. தூங்குவது வாலிபனாக இருந்தால் அவனது துடிப்பு அவனை எழுப்பும் காதலிக்குப் பணிந்துவிடுகிறது. கள் வெறி போதைசாம்ராஜ்யத்தின் முகப்பு வாசலென்றால் தூக்கக் கலக்கம் அதன் கொல்லை வாசல். பானத்தால் போதை தொடங்குகிறது; பள்ளி எழுச்சியில் வெறி அஸ்தமிக்கிறது.

கண்ணம்மா பஞ்சவர்ணத்தை எழுப்பும்போதெல்லாம் அவனுக்குக் கோபம் வராமலில்லை. வந்தது. அந்தக் கோபம் உச்சத்திற்கு ஏறி ஒருகணத்தில் சுருண்டுபோகும். அவள் சிறிப்பாள். அவனும் சிரிக்க முயலுவான்; ஆனால் சிரிக்கமாட்டான். பஞ்சவர்ணம் மிகவும் அடக்கமானவன். அதிகம் சிரிப்பதுமில்லை; தேவையில்லாமல் கோபப்படுவதுமில்லை.

அன்று அவனை கண்ணம்மா எழுப்பவில்லை. வெகுநேரம் கழித்து அவனாக எழுந்தான். வழக்கம்போல் நீராகாரம் குடிப்பதற்காகக் கண்ணம்மாவைக் கூப்பிட்டான். ஆடிவரும் சிலைபோல், அழுதகண் துடைக்காமல் குஞ்சரம் குகைக்குள்ளிருந்து வந்தாள்.

"நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? என்னால் தங்களுக்கு எந்த ஆபத்தும் வராது. உங்களுக்கு ஏற்பட இருந்த ஆபத்தைத் தவிர்க்கத்தானே உங்களை இங்கே கொண்டுவந்தேன். தவறாகக் கருதாதீர்கள் சகோதரி. ஒரு பெண்ணைக் கெடுக்க நினைக்கும் ஆடவன், அவனுடைய உயிர்க்காதலி இருக்குமிடத்திற்கா கொண்டுவருவான்!"-பஞ்சவர்ணம் பேசினான்.

குஞ்சரம் கண்ணைத் துடைத்துக் கொண்டே நின்றாள்.

பஞ்சவர்ணம் தொடர்ந்தான்: இசை இசை என்று துடித்தேன். சகநண்பர்களெல்லாம் என்னைச் சங்கீதப் பைத்தியம் என்று அழைப்பார்கள். பஞ்சவர்ணம் கோழை; பருவத்தை வீணாக்கப்போகிறவன். சங்கீதத்தைத் தவிர இவனிடம் என்ன இருக்கிறது என்றுகூட என்னை ஏளனம் செய்தார்கள். எனக்குக் கண்ணம்மா கிடைத்தாள். எதை நம்பி அவள் என்னை விரும்பினாள்?.......பணக்காரர்களெல்லாம் பார்த்தால் திகைக்கும்படி கிடைத்த அவளை நான் மோசம் செய்யவேமாட்டேன். என்னுடைய இந்த உறுதி மட்டுமே நான் உங்களை எந்த அளவுக்குப் பெருமையாக மதித்திருக்கிறேன். என்று புலப்படுத்தும்."

குஞ்சரம் தேம்பலை நிறுத்தவில்லை.

பஞ்சவர்ணம் மறுபடியும் ஆரம்பித்தான்: "கண்ணைக் கசக்காதீர்கள். என்னைப் பாருங்கள். பெண்ணைக் கெடுக்கும் பித்தலாட்டக்காரனாகவா நான் தோன்றுகிறேன். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்கிறார்களே, அது உங்களுக்குப் புலப்படவில்லையா? என்னைப் பற்றி என்னிடம் கேட்காதீர்கள். என் கண்ணம்மாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்."

குஞ்சரம், 'அண்ணா' என்று கதறினாள். அடுத்த கணம் அவன் காலில் விழுந்தாள். அவளைத் தொட்டுத் தூக்க அவன் படாத பாடுபட்டான்.

"நான் தங்களை நன்கு உணர்ந்தேன். ஆனால் கண்ணம்மா உணரவில்லை. என்னை அவர்கள் விரோதியாகக் கருதிவிட்டார்கள் அண்ணா. இன்று காலையிலிருந்து கண்ணம்மாவைக் காணவில்லை" என்றாள் குஞ்சரம்.

பஞ்சவர்ணம் பதில் பேசவில்லை. துப்பட்டியை உதறித் தோலில் போட்டுக்கொண்டு குகை முழுதும் தேடினான்.

"அண்ணா, கண்ணம்மா, அவர்கள் தாயார் வீட்டுக்குத்தான் போயிருக்க வேண்டும். வேறு அவர்கள் எங்கு போகவும் மார்க்கமில்லை. நீங்கள் என்ன நினைத்தாலும் சரி, நான் இங்கு வந்தது அவர்களுக்குப் பிடிக்கவே இல்லை" - குஞ்சரம் துக்கக்குரலில் இப்படிக் கூறினாள்.

பஞ்சவர்ணம் குழம்பினான். பெண்களுக்கு இது இயல்பு தானே என்ற பொது நோக்கிற்கு அவன் வந்துவிடவில்லை. மலையடிவாரத்திலிருந்த ஒற்றையடிப்பாதை வழியாக கீழே இறங்கினான். பத்தடி தூரத்திற்குப் பிறகு ஒரு நீண்ட பட்டாக்கத்தி பட்டு உரையுடன் காணப்பட்டது. அந்தக் கத்தி, கண்ணம்மா தாய் வீட்டுக்குப் போகவில்லை என்பதை உறுதிப்படுத்தியது. கத்தியை எடுத்துக்கொண்டு கோயிலுக்குத் திரும்பினான். உரையிலிருந்து கத்தியை உருவினான். அது உண்மையான கத்தியல்ல. வெள்ளிமூலாம்பூசப்பட்டு பார்வைக்காக வைத்துக்கொள்ளக் கூடியதாகத் தென்பட்டது.

"நாடகத்தில் ராஜா வேடம் போட்டுக்கொள்கிறவர்கள் இடுப்பில் செருகிக்கொள்ளும் தகரக்கத்தி போலல்லவா இருக்கிறது" என்று தானாகச் சொல்லிக்கொண்டான் பஞ்சவர்ணம்.

குஞ்சரம் கொஞ்சம் விழித்துக் கொண்டாள். அந்தக் கத்தியை வாங்கிப் பார்த்தாள். அதனுடைய பட்டு உரையை திரும்பித் திருப்பிப் பார்த்தாள்

"அண்ணா ஒரு விஷயம். சூரைக்குடியில் வேலு வேலு என்று ஒருவர் இருக்கிறான். அவர் நாடகங்களில் அல்லி வேடம் போடுபவன். இது அவருடைய நாடகக் கத்திபோல் இருக்கிறது" என்று மெதுவாகச் சொன்னாள். பஞ்சவர்ணத்திற்கு குஞ்சரத்தின் பேச்சில் நம்பிக்கை இருந்தது.

உடனே ஒரு குறுக்குக் கேள்வியைப் போட்டான். "நடிகன் வேலு உன் தந்தைக்கு வேண்டியவனா? மான்கொம்புக்கு வேண்டியவனா?" என்று கேட்டான்.

"இருவருக்கும் அவன் வேண்டியவன். நீங்கள் முதலில் சூரைக்குடி போய் அவனைப் பற்றித் தெரிந்து கொள்வது நல்லது. இது அவனுடைய கத்தியே தான்" என்று திட்டவட்டமாகக் கூறினாள்குஞ்சரம்.

பஞ்சவர்ணம் சூரைக்குடிக்குப் பயணமானான்.

★

குஞ்சரம் இறந்திருந்தால்கூட சிங்கப்பெருமாள் அவ்வளவு கவலைப் பட்டிருக்கமாட்டார். ஓடிப்போய்விட்டாள் - அதுவும் யாரோ ஒருவன் கவர்ந்து சென்றுவிட்டான் என்ற கவலை அவரைப் பத்து நாட்களாக வாட்டி வதைத்தது. உலகம் தன்னைக் கைவிட்டு விட்டதாகவே அவருக்குத் தோன்றியது. ஊரிலுள்ளவர்கள் அவருக்குத் தந்துகொண்டிருந்த மரியாதையையே குறைத்துக்கொண்டு விட்டதாக அவர் நினைத்துக்கொண்டார். யாராவது ஒருவன் அயலூர்க்காரன் மேல்துண்டை எடுக்காமல் அவருக்கு எதிரே போனால், இந்த மரியாதைக் குறைவெல்லாம் குஞ்சரம் ஓடிப்போனதால் வந்ததுதான் என்று எண்ணிக்கொள்வார்.

பால்யத்திலேயே அனாதைகளாகி பலவகைத் துயரங்களை அனுபவித்து உயர்ந்தவர்களுக்கு, கவலை என்பது முன்னேற்றப்படியாகப் போய்விடுகிறது. அப்படி நினைக்குமளவிற்கு அவர்கள் மனவளம் பெற்றுவிடுகிறார்கள். ஆனால் பரம்பரைக் கௌரவத்தால் உயர்ந்தவர்களுக்கு சிறு கவலைகூடப் பெரிதாகத் தோன்றுகிறது. சுடு சொல்லும் கொடுவாளாகிவிடுகிறது. பணக்காரனைப் பார்த்து "அவனுக்கு என்ன கவலை; ஆயிரம் வேலி நிலம் இருக்கிறது. பாயிரம் பாட ஆட்கள் இருக்கிறார்கள்" என்கிறார்கள். நிம்மதி என்பது நிறைந்த செல்வத்திலே மட்டும் கிடைத்துவிடக் கூடியதல்ல. சொத்திலே தான் சுகம் இருக்கிறது என்றால், உலகில் இதுவரை செத்தவர்கள் அனைவரும் பட்டினியாகவா இருந்தார்கள். இல்லை! கோடீஸ்வரன் துளி விஷயத்தைக் குடித்துச் செத்திருக்கிறான்; பணக்கார வீட்டுப் பதினெட்டு வயதுக் குமாரி பாழுங்கிணற்றில் விழுந்து மாண்டிருக்கிறாள். அவர்களுக்கெல்லாம் நிம்மதிக் குறைவு எதில் ஏற்பட்டது? வாழ்வும் சாவும், இன்பமும் துன்பமும் பணத்திற்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல. கவலைக்குப் பல வடிவங்களுண்டு. ஏழைகளைத் தாக்கும்போது அது வறுமையின் வடிவம் பெறுகிறது; பணக்காரனைச் சாடும்போது 'மானபங்கம்' வடிவத்தைப் பெறுகிறது. சிங்கப்பெருமாளைத் தாக்கிய கவலை 'உன் குலப்பெருமை என்ன ஆயிற்று?' என்ற கேள்விக் குறி உருவில் அவர் உள்ளத்தில் ஊடுருவி பம்பரமாய்ச் சுழன்று, சிற்றுளியாய்க் குடைந்துகொண்டிருந்தது.

அன்று, பிற்பகல் நெடுநேரமாகியும் சிங்கப்பெருமாள் உணவுகொள்ளாதிருந்தார். நிழல் சாய்ந்துவிட்டது.

அப்போது தோட்டக்காரன் கைகளைக் கட்டிக்கொண்டே சிங்கப்பெருமாளின் பக்கத்தில் வந்தான். அவர் விழிகளை உயர்த்தினார்.

"மான்கொம்பாரின் கூட்டாளி வந்திருக்காரு எசமான்" என்றான் தோட்டக்காரன்.

சிங்கப்பெருமாளுக்கு விபரம் புரியவில்லை. "விளங்கச் சொல்லுடா நாயே" என்றார் உரத்த குரலில்.

"பூவாத்தா செத்த அன்னைக்கி மாங்கொம்மாருக்கு உதவி ஒத்தாசையா இருந்து பேசிய அந்தப் பிள்ளையாண்டான் வந்திருக்காரு; எசமானைப் பாக்கணுமாம்" என்றான் தோட்டக்காரன்.

சிங்கப்பெருமாள் நெஞ்சம் உணர்வுபெற்றது. கலவரத்தன்று அந்த வாலிபன் மீசையைத் தடவிப் பேசியதையெல்லம் சிங்கப்பெருமாள் மறந்துவிடவில்லை. அந்த எக்காளக் குரல் அம்பலகாரரின் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருந்தது. அவைகளை ஒருமுறை எண்ணிப் பார்த்துக்கொண்டார். வேகமாக உள்ளே போய், துப்பாக்கியை எடுத்துவந்து பக்கத்தில் வைத்துக் கொண்டார். அதன் பிறகு அந்த வாலிபனை உள்ளே அழைத்துவர அனுமதி கொடுத்தார். தோட்டக்காரன் வெளியில் போய் அந்த வாலிபனை உள்ளே அழைத்துவந்தான்.

பஞ்சவர்ணம் மண்டையில் பலத்த கட்டோடு தோட்டக்காரனைத் தொடர்ந்து உள்ளே வந்தான்.

- தொடரும் -

### திருமணம்

இராமநாதபுர மாவட்டம்-திருப்புத்தூர் நகர் தி. மு. க.வின் முன்னாள் செயலாளர் தோழர் கா. **காத்தமுத்து** அவர்களுக்கும், நாட்டரசன்கோட்டை திரு. சுந்தரராசு அவர்களின் மகள் சரோஜாவிற்கும் 23-4-58ம் தேதி காலை 9-30 மணியளவில் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும்.

தமிழ்நாடு ஆவணக காப்பக நூலகம் 198380 600 008






வரச்சொல்லி இரண்டு கடிதங்கள் அனுப்பிவிட்டார்கள் மாத்தூரிலிருந்து. அம்மாவின் அன்பும் அப்பாவின் அதிகாரமும் அவன் கண்முன் வந்து நின்றன. போகாமல் நின்ருலோ பெரியசாமியே நேரே வந்து 'என்ன செய்தி' என்று கேட்பார். போனாலோ சிவகாமி அம்மாள் கண்களில் குளத்தைக் காணவேண்டும். திருமணமோ முடிந்தது போலத்தான் என்று கடிதம் சொல்லுகின்றது. இந்த நிலையில் திருமணத்தை எப்படி நிறுத்த இயலும்? நிறுத்தாவிடின் அமுதவல்லி என்ன ஆவது? அவள் எக்கேடோ கெட்டுக்கீரைப் பாத்தியாகட்டும் என்று விட்டுவிடலாம். ஆனால் அவள் கையில் இருக்கும் சின்னஞ்சிறு பிஞ்சு என்ன ஆகும்? அதைக்கூட எப்படியாவது எங்காவது வளர்த்துவிடலாம். அருணாசலம் அச்சுறுத்துவானே அவனுக்கு என்ன சொல்வது என்று ஞானசம்பந்தன் நடுங்கினான்.

இப்படிப் பல்வேறு எண்ணங்களை எண்ணி எண்ணி குழம்பி இருந்தவன் நெடுநேரத்திற்குப்பின் ஒரு முடிவுக்கு வந்தான்.

மாலை அமுதவல்லியைப் போய்ப் பார்த்துவிட்டு வருவது என்றும் மறுநாள் மாத்தூருக்குப் பயணமாவது என்றும் முடிவுகட்டினான்.

அன்று மாலை அமுதவல்லியைக் கண்டான். 'ஏன் இரண்டு நாட்களாகக் காணோம்? என்ருள். 'தேர்வுக்குப் படிக்கின்றேன்' என்ருன் அவன். அவளும் உண்மை என்று நம்பினான்.

அன்று நெடுநேரம் கழிந்த பின்னும் விடுதிக்குப் போகவேண்டும் என்ற எண்ணமே எழவில்லை. அவனுக்கு "அமுதா" என்ருன்.

"என்ன?"

"இன்றைக்கு இங்குதான் இருக்கப்போகின்றேன்."

"மெய்யாகவா?" என்று வியந்தாள் அமுதவல்லி. இதுவரை எத்தனையோ நாட்கள் தங்குமாறு அவள் வற்புறுத்தியும் அவன் 'இல்லை நாளை வருகின்றேன்' என்று போய்விடுவான். அதனால் அவனை இரவு தங்கச் சொல்லும் எண்ணத்தையே அவள் விட்டுவிட்டாள். அவனாக ஒருநாள் 'நான் இருக்கிறேன்' என்றதும் அதை அவளால் நம்பமுடியவில்லை. 'மெய்யாகவா?' என்று கேட்டாள்.

"ஆமாம்" என்ருன் ஞானசம்பந்தன்.

இரவு உணவு முடித்தபின் அருணாசலம் ஏதோ புதிதாக வெளிவந்த திரைப்படம் பார்க்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு போய்விட்டான். அந்தச் சின்ன வீட்டில் ஞானசம்பந்தனும் அமுதவல்லியும் அவர்கள் காதலின் கனியாய் வந்து தவழும் செல்வமும் மட்டுமே இருந்தனர். அந்தச் செல்வம் இரண்டொரு முறை உறக்கம் கலைந்து அழுதான். அமுதவல்லி எழுந்தோடி அவனை எடுத்தணைத்து 'கண்ணு' என்று இரண்டொரு சொற்களால் அழைத்து உறங்கச் செய்து திரும்பி வந்தாள்.

அவள் அவனைக் 'கண்ணு' என்றழைத்தபோது தான் அவனுக்கு இன்னும் பெயர் வைக்கவில்லையே என்ற நினைப்பு வந்தது ஞானசம்பந்தனுக்கு. அவள் திரும்பி வந்ததும் அவளிடம் அதைப் பற்றிச் சொன்னான்.

"நீங்களே ஒரு பெயர் வைத்துவிடுங்கள்." என்ருள் அவள்.

"நீதான் சொல்லேன்" என்ருள் அவள்.

"நீங்கள்தான் பெயர் வைப்பதில் திறமைமிக்கவர் ஆயிற்றே. முன்னே ஒரு பெண்ணுக்கு அமுதவல்லி என்று பெயரிட்டிருக்கிறீர்கள். இப்போது ஒரு பையனுக்குப் பெயர் வையுங்கள்" என்ருள்.

"அமுதவல்லி என்பது உன் பெயர் அல்லவா?"

"என் பெயர் அதுதான். ஆனல்"

"என்ன ஆனல்?"

"அந்தத் தடியன் பெயர்தான் அருணாசலம் இல்லை."

"மெய்யாகவா?"

"அருணாசலம் என்பது எங்கள் உறவினர் ஒருவர் பெயர். அவர் மிகவும் நல்லவர். இவன் அவர் பெயரை வைத்துக்கொண்டான்."

"இவன் பெயர் என்ன?"

"யாருக்குத் தெரியும்? என்னவோ கிடக்கிருன் விடுங்கள்." என்று அந்தச் செய்தியைவிடச் சொன்னாள். அவள் மகனுக்குப் பெயர் இடச்சொல்லி வேண்டினாள்.

பல பெயர்களைச் சொல்லிச் சொல்லிப் பார்த்தனர் இருவரும். எந்தப் பெயரும் இருவருக்கும் ஏற்றதாக வாய்க்கவில்லை. இறுதியாக பொன்னப்பன் என்று பெயர் வைப்பதாக முடிவு செய்தார்கள்.

அன்று இரவு அமுதவல்லிக்கு இன்ப இரவாக இருந்தது. ஞானசம்பந்தனைப் பிரியாமலிருக்கவேண்டுமே என்ற கவலை அவளை வாட்டியது. அவனை அன்போடு அரவணைத்து அன்பு பொழிந்தாள்.

"போய்விட மாட்டீர்களே?" என்று ஏக்கத்தோடு கேட்டாள். ஞானசம்பந்தன் உடனே பதில் சொல்லவில்லை. சற்றுநேரம் என்ன சொல்வது என்று அறியவில்லை அவன். அந்தச் சற்றுநேரம் ஒரு கணம்தான். ஒரே ஒருகணம் ஆனல் அந்த ஒருகணம் அமுதவல்லிக்குப் பெரிய வேதனையைத் தந்துவிட்டது. மறுபடியும் ஏக்கமும் ஏமாற்றமும் கலந்த குரலில் "போக மாட்டீர்களே" என்ருள்.

ஞானசம்பந்தன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். மாசு மருவற்ற இந்த முகத்திலா மருட்சியை ஊட்டுவது என்று எண்ணினான். இவளைக் கைவிடுவது கயமை! என்று எண்ணினான். அவள் முகத் தாமரையைக் கையில் ஏந்தி இரண்டொரு முத்திரைகளைப் பதித்து "போகமாட்டேன்" என்ருன்.

அமுதவல்லியின் நெஞ்சம் விம்மித் தணிந்தது. நீண்ட ஒரு மூச்சு அவள் நெஞ்சக்குழியினின்றும் பிறந்தது. ஆறுதல் பெற்ருள் அந்த அபலைப்பெண். அன்று இரவு அமைதியாகக் கழிந்தது அவள் வாழ்க்கையில்.

★

ஞானசம்பந்தன், தெருக்கோடியில் போகும்போதே வீடு பளிச்சென்று தெரிந்தது. வெள்ளை அடித்து வண்ணம் பூசி வீட்டை விளக்கம் செய்திருந்தார் பெரியசாமி. வீடு விளக்கம் பெற்றிருந்தது. ஆனல் அதைக் கண்டபின் விளக்கம் பெற வந்த ஞானசம்பந்தனின் மனம் இருண்டது.

நேற்று இரவு 'பிரியேன்' என்று அங்கே அவளுக்கு ஆறுதல் சொன்னான். இன்று திருமணத்திற்கு ஏற்பாடுகள் நடைபெறுவது தெருக்கோடியிலேயே தெரிகின்றது. என்ன செய்வான் அவன்? எதையும் வேண்டாம் என்ருே வேண்டும் என்ருே சொல்லிப் பழக்கப்பட்டவன் அல்ல. துணிவு இல்லாமல் இதுவா அதுவா என்று எப்போது நிலைமை வந்தாலும் இதுவும்தான் அதுவும்தான் என்று ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒரு காலும் வைத்துப் பழக்கப்பட்டவன் அவன். பள்ளியில் படிக்கும்போதே அப்படித்தான். இரண்டாட்டம் 'சடுகுடு' என்று மூச்சைப் பிடித்து ஆடுவான். அந்த மூச்சை நடுவிலேயே விட்டுவிட்டு 'அவுட்' ஆகிவிட்டால் உடனே 'கிளித்தட்டு' விளையாடும் இடத்திற்கு ஓடிவிடுவான். எதிலும் எப்போதும் இப்படியே இருந்தவன் ஆதலினல் அவன் மனம் ஊசலைப் போல் ஆடியது.

அந்த ஆட்டத்தில் தானும் சேர்ந்து ஆடியவனாய் வீட்டினுள் நுழைந்தபோது சிவகாமி அம்மாள் பரபரப்பாக ஏதோ செய்துகொண்டிருப்பதைக் கண்டான். பெரியசாமி புறக்கடையில்மேல்துண்டைத் தலைப்பாகையாக கட்டிக்கொண்டு ஆட்களுக்கு உத்தரவுகள் இட்டுக்கொண்டிருந்தார். சிறு குன்றுபோல் ஒருபக்கம் பிளந்த விறகின் குவியல் காணப்பட்டது. மாட்டுத் தொழுவத்தின் ஒரு மூலையில் பின்னப்பட்ட தென்னைஓலைகள் கட்டுகட்டாக போடப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் கண்டதும் ஞானசம்பந்தனின் உள்ளத்தில் எஞ்சி இருந்த உறுதியும் தளர்ந்தது. தந்தையிடம் என்ன பேசுவது என்றே அறியாமல் திண்டாடினான். தாயாரிடமாவது இரண்டு சொல் பேசிடலாம் என எண்ணி சமையல் அறையில் அடி எடுத்து வைத்தவன் அங்கே புதிய குரல் கேட்டு நிலைத்து நின்ருன்.

மேலே செல்வதா திரும்பிடுவதா என்று எண்ணியிருந்த நேரத்தில் யாரோ முதிய அம்மாள் ஒருவர்–புதியவர் வந்து–"தம்பி காப்பி சாப்பிடு! அம்மா உள்ளே வேலையாக இருக்கிருர்கள்" என்று குவளையை நீட்டினார்கள்.

ஏதும் மறுமொழி சொல்லாமல் அவன் வாங்கிக்கொண்டான். சுவையும் பாராமல் சூடும் பாராமல் மடக் மடக் என்று இரண்டுவாயாக குடித்துவிட்டு மாடிப்படி ஏறினான்.

அங்கும் யாரோ புதிய மனிதர்கள் குரல் கேட்டது. மேலே ஏறிச் செல்ல வேண்டாம் என்று எண்ணி இரண்டு படிகளும் இறங்கிவிட்டான். இதற்குள் மேலேயிருந்து யாரோ ஒருவர் எட்டிப் பார்த்தார். ஞானசம்பந்தன் கீழிறங்கிச் செல்லுவதைக் கண்டு அவனை அழைத்தார்.

"வாங்க மாப்பிள்ளை வாங்க" என்று அவர் வரவேற்பிதழ் படித்தார். அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளாமல் திரும்புவது நாகரிகமாக இராது என மேலே சென்ருன். அங்கே நான்கைந்து பேர் புதிய மனிதர்கள் இருந்து சீட்டு ஆடிக்கொண்டிருந்தனர். வேறு நான்கைந்து பேர் அவர்கள் ஆடுகின்ற ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். மூலையில் ஞானசம்பந்தன் வைத்திருந்த நூல்களை எடுத்து எங்கோ வைத்துவிட்டு அதன்மீது வெற்றிலைத் தட்டையும் பழத் தடட்டையும் வைத்திருந்தனர்.

ஞானசம்பந்தனைக் கண்டதும் ஒருவர் என்ன மாப்பிள்ளை "இப்போதே குடும்பக் கவலையோடு இருக்கிருரே" என்று சொல்லிவிட்டுச் சுற்றிலும் பார்த்தார். எல்லோரும் கீழே விழுந்த ஜாக்கியை யார் வெட்டப் போகிருர்கள் என்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தனரே ஒழிய இவர் அவிழ்த்துவிட்ட சிரிப்பு வெடியைக் கவனிக்கவில்லை. மற்றவர்கள் அதைக் கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும் அதைப்பற்றி அவருக்குக் கவலை இல்லை. தம்முடைய நகைச் சுவைப் பேச்சுக்குத் தாமே பெருங்குரல் எடுத்துச் சிரித்தார்.

சற்றைக்கெல்லாம் ஞானசம்பந்தனுக்கு உற்ற துணைவரைப்போல் அவனை அழைத்துக்கொண்டுகீழே இறங்கினார்.

"நீங்கள் ஆடிக்கொண்டிருங்கள். நான் இதோ வருகின்றேன்" என்ருன் ஞானசம்பந்தன்.

"நீ ஒன்று, நான் எங்கே மாப்பிள்ளை ஆடுகின்றேன்; சும்மா வேடிக்கை பார்க்கின்றேன். அவ்வளவுதான் வா, போகலாம்" என்று சொல்லிக்கொண்டே அவனுக்கு முன்னே நடந்தார்.

அவரைத் தட்டிக் கழிக்க வழியறியாமல் ஞானசம்பந்தன் குளத்தங்கரைக்குச் சென்ருன். எங்கோ தொலைவில் எழிலன் குடை ஒன்றை மடித்துக் கையில் இடுக்கிக்கொண்டு வரப்பின்மீது நிளறு வயலில் இறங்கி வேலை செய்துகொண்டிருந்தவர்களை ஏவல் செய்துகொண்டிருந்தான். ஞானசம்பந்தன் கைக்குட்டையை எடுத்து இரண்டு மூன்று முறை அசைத்து அவனை அழைத்தான். எழிலன் வருகின்றேன் என்று குறிப்பு காட்டிவிட்டு விரைந்து வந்தான். அவன் வந்துசேரும்முன்னே சீட்டு ஆடிக்கொண்டிருந்த ஒருவர் வந்து ஞானசம்பந்தனுக்குத் 'துணை' வந்தவரை அழைத்துக்கொண்டு போனார்.

எழிலன் சற்றுத்தொலைவில்வரும் போதே "என்ன மாப்பிள்ளை எப்போ வந்தீர்கள்?" என்று கேட்டான்.

ஞானசம்பந்தனுக்கு ஓரேதிகைப்பாக இருந்தது. எல்லோரும் மாப்பிள்ளை என்று அழைக்கின்ருர்களே ஏன் என்று அறியாமல் திகைத்தான். எழிலனைக் கேட்டான்.

"என்னப்பா சும்மா கதைவிடுகின்ருய்? உண்மையாகத் தெரியாது?" என்று திருப்பிக் கேட்டான் அவன்.

"தெரியாது" என்ருன் ஞானசம்பந்தன்.

"அகோ வாரும் மாப்பிள்ளை அவர்களே. உமக்குத் திருமணம் செய்வதாக தீர்மானித்திருக்கின்ருர்கள். இன்று இரவு திருமண உறுதி-வெற்றிலை மாற்றிக்கொள்ளுகின்ருர்கள்" என்று மூச்சு விடாமல் சொல்லி மேலும் சொல்ல வாயைத் திறந்தான்.

தொடரும்

M211.N54TL
N57.4.40

# பழமொழி-ஒரு விளக்கம்!

தோன்று தொட்டு மக்களால் ஏதோ ஒரு காரணத்தை மையமாகக் கொண்டு சில வழக்குகள் வழங்கப் பெறுவதைப் பழமொழிகள் என்று புகல்வர். அத்தகு பழமொழிகள் அடங்கிய பல ஏடுகள் வெளிவந்துள்ளன. அக்கால வழக்கில் உண்மையும் தவருது நிகழும் சில செயல்களும் ஆதாரமாகக் கொண்டே இப்பழமொழிகள் ஆக்கப்பட்டனவா? அன்றி எதுகை மோனை காரணமாகஉருவாக்கபெற்றனவா? என்பது ஐயப்பாடு. பழமொழிகள் பயன்மொழிகள் எனலாமா? பயமொழிகள் எனலாமா? அன்றி பழ-மொழிகள் (பழையன, பயனில) எனலாமா? என்றும் ஐயப்பாடு எழத்தான் செய்கிறது. இந்த ஐயப்பாட்டிற்கு நடுநிலையில் இழையோடுவது தமிழக வரலாற்று ஏட்டில் வடிக்கப்பெற்ற இரு பெருங் காப்பியங்களே ஆகும்.

**"தாயைப் போல பிள்ளை**
**நூலைப் போல சேலை"**-

இந்தப் பழமொழியை சிறு சிறு குக்கிராமங்களிலும் பெரும் நகர்ப்புறங்களிலும் செவிமடுக்கலாம். "சிலப்பதிகாரம்-மணிமேகலை" இரண்டினையும் கொண்டு இந்தப் பழமொழி சிலருக்கே பயன்மொழியாகவும், சிறப்பாக பயனற்ற மொழியாகவும் காட்ட இயலும்.

சித்திராபதி அழகி. அத்தகு சிறப்புள்ள அணியிழைக்குத் தங்கத்தைப் பழிக்கும் அங்கத்தையுடைய மங்காத குல்விளக்காம் மாதவி தோன்றினுள். உடலை விற்று ஊன் பெற்று வாழும் குடியில் செம்பவளச் சிலையழகி மாதவியும் தோன்றினுள்.

மாதவியின் தாய்—மங்கையர்கள் குலத்திற்கு மாசாய் விளங்கிய சித்திராபதி என்பாள் தாயைப் போலவே பிள்ளை திகழ்கின்றமை கண்டு களிப்பெய்தினுள். பொன்னும் பொருளும் என்றும் குறையாது பெறும் குன்றனைய செல்வத்தான் கோவலனைக் காவலனுய்க் கண்டமை குறித்து களிப்புக் கொண்டாள் போலும். மாதவியோ மங்கை நல்லாள், தன் அங்கைவிட்டகலாத நிலையில் ஆடலும், பாடலும் இடையிடையே ஊடலும் இறுதியில் கூடலும் குழைத்தூட்டிக் கோவலன்பால் பிரியலுருப் பெற்றிபெற்ருள். கோவலனின் கோயிலனைய செல்வநிலையினையோ, அவன் தனக்களிக்கும் தகுதியினையோ மறந்தும் எண்ணினுய் காணப்பெறவில்லை. ஆயினும் பெண்ணினம் தவருய் எண்ணிடக் கூடாதே என்ற தவருன எண்ணத்தால் கண்ணெனப் போற்றிக் காத்து வளர்க்கப்பெற்ற பொன்னினை வாரி வாரி இறைக்கின்ற குற்றம், கொள்கையற்ற கோவலனையே சாரும் என்க. கோவலனும் தனக்கொரு மனைவி உளாள் என்பதை மாதவி அறியச் செய்ய விடுபவனில்லை. ஏனெனில் தன் குற்றம் பிறர் கண்ணில் படுவதில் விருப்பமற்றவன் என்பதால்தான்.

மாதவியும் கோவலனும் மனமொப்பி இல்லறம் இயற்றி தன் வினைவாகக் கற்பூரப்பெட்டகமாம் மணிமேகலை எனும் அணியிழை தோன்றினள். மணிமேகலை என்று பெயரிட அணிமணிகளை வாரி வாரி இறைத்த கோவலனை மாடலன் மறையவன் காட்டுகிருன். இதனின்று பிறர் புகழ்வதன் பொருட்டுத் தன் பொற்குவியலை வாரி இறைத்தான் கோவல வழுதி என்பது எளிதிற் போதரும்.

காலக்கழிவில் குன்றெனக் கொழித்த கோவலர் செல்வம் இன்றென்னும் நிலைக்குக் குன்றியது. குன்றியமை கண்டு மாதவி தன்மேல் கொண்டுள்ள விருப்பம் சென்றுவிடலாகும் என்று வண்டுள்ளம் கொண்ட கோவலன் எண்ணுகின்ருன். இடைப்பட்ட வேளையில் இந்திர விழாவும் தந்திரமாய் வந்து கானல்வரிக்குக் கடத்திச் சென்று காதலரிருவரையும் கலக்கமுறப் பிரித்ததன்ருே! மாதவி பாடிய பாடல் மற்ருெருவனை மனத்தே இறுத்தியன்ருே என்று முற்குற்றம் இழைத்தமையை எண்ணுத கோவல வழுதி - தன் குன்றனைய செல்வம் குறைந்தமையாலன்ருே மற்ருெருவன்மேல் மனம் வைத்து மாதவி பாடலுற்ருள் எனத் தவருகப் புரிந்து விரைவாகக் கற்பின் நிலைக்களமாம் பொற்பின் செல்வி கண்ணகியை அடைகின்ருன்.

மாதவியும் கோவலன்பால் பழக்கம் மிக உடையவள் என்றமையால் 'ஊடல் இதுவும்' என்று மடல் ஒன்று வரைந்து வயந்தமாலை வழியாகக் கோவலற்குக் கொடுத்திட்டான். அவன் மறுத்திட்ட மறுமொழிகள் மூலம்தான் தன்னை அவன் வெறுத்திட்டான் என்பதனை மனத்தகத்தே நிறுத்திட்டான். இனிமேல்தான் மாதவியினை நாம் தாயைப்போல பிள்ளையா? என ஆய்தல் வேண்டும்.

மீண்டும் அந்த ஆண்டும் இந்திர விழா வருகின்றது. ஆடலுக்கு என்றே உடல்பெற்ற குலத்தில் உதித்த ஆரணங்கு மாதவியின் ஆடல் ஒன்றே அவ்விழாவின் மணிமுடியாகும் என்று எங்கணும் கூறுவதை அங்கங்கே செவிமடுத்த சித்திராபதியாள் தன் குலக்கொழுந்தாம் மாதவிபால் வயந்தமாலையினைத் தூதனுப்பினுள். கோவலன் போனுல் என்ன? வேருெரு காவலன் வலையினில் விழவாமாட்டான் என்ற சபல எண்ணம் மிக்கவளன்ருே தாய்! அபலைப் பெண் மாதவி கவலை தோய்ந்த நிலையில் கோவனைக்காண இயலாதே என இழந்து ஏங்கிக் காணப்படுகிருள். அவ்வேளைதன்னில் தம் குலத்தொழிலை மறந்திருக்கும் மாதவிக்கு அதனை நினைவூட்டிய வயந்தமாலை—

**"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த**
**ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்—**
**கற்று, துறைபோகிய பொன்தொடி நங்கை**
**நல்தவம் புரிந்தது நாண் உடைத்தே."**

'உன் குலமுறை பிழையாது ஆடலதனை மறத்தல் தவருகும். அதனினும் வெட்கமுடையது நீ இப்பொழுது ஏற்றுள்ள தவநிலை அகும்.' என்ற வெஞ்சொல் கேட்டு தன்சொல் கூறப்போந்த மாதவி கோவலன் இறந்தனன், நான் உயிர்வாழுகின்றேன். குலமுறையைக் காக்க அல்ல; என் குலவிளக்கம் மணிமேகலை என்பாளை நல்லறப்படித்தி நானிலம் போற்றச் செய்து புகழ்விளங்கவே உயிர் வாழுதலுற்றேன். நான் வந்த வழிமுறையில் வழுவிருப்பினும் வாழ்ந்த வழியிலும் இனி வாழும் வழியிலும் பழிகள் ஒழிக்கப்பெறுவதை உணர்வாய். என் மகளல்ல மணிமேகலை—மதுரையை எரியகப்படுத்திய கண்ணகியின் கற்புவழி வந்தவள் மணிமேகலை. அவளை "அருந்தவப்படுத்தல் அல்லது, யாவதும் திருந்தாச் செய்கை தீந்தொழில் படாஅள்" என்று உறுதிகூறித்தானும் "மாதவர் உறைவிடம் புகுந்தேன்" என்று முடிக்கிருள்.

மாதவியை குல முறையினைக் கெடுத்த கோடாரிக்காம்பு என்று குலப்பிறப்பாளர்கள் கூருர். ஆயினும் செல்வத்தையே சிறப்புத்தரும் விளக்கு என்று விளிப்போர் சித்திராபதி போன்ருேர் குறைவுபட்ட குலவொழுக்கத்தை வழுவாமல் காப்பதில் வியப்பில்லை. குலப்பிறப்பு என்பது நல்லகுடிப்பிறந்த பண்பாளன் என்பதே பொருள்தவிர, உடல் விற்கும் குடி, உத்தியோகம் பெறும்குடி, தானம் வாங்கும் குடி என்று வேறுபட்ட பிழைப்பினை அடிப்படையாகக் கொண்டதல்ல.

சித்திராபதியினைக் காட்டிய கவிஞர் தன் குலத்தொழிலில் குற்றமின்றிச் செவ்வனே செய்து பொருள் ஈட்டியமையைக் காட்டினுர். ஆனல் அவள் மகள் மாதவி "ஒருவனே கணவன், காதலன் எல்லாம்" என்று முடிவுகொண்ட உயர்பிறப்பாளாய்க் காட்டினுர். மாதவியின் மகள் மணிமேகலை இவ்விருவரும் போலன்றி தவஒழுக்கமே சால்புடைத்து என்று மேல்நிலையை உடையவளாய்க் காட்டினுர்.

சித்திராபதி—மாதவி—மணிமேகலை இம்மூவரும் மூன்று வேறுபட்டவர்கள் என்பதில்லை, பிறப்புகொண்டு பார்த்தால். தாயைப்போல மகள் இல்லை. சித்திராபதி பலரைக் காதலராய்ப் பெற்ருள். மணிமேகலையோ காதலனே தேவை இல்லை என்று சமனத்துறவியாக ஆகிவிட்டாள். எனவே "தாயைப்போல பிள்ளை" இருத்தல் வேண்டும் என்பது பொருந்துவதோ? என்பது ஐயத்திற்கிடமான பழமொழியாகும்.

— கதிரவன்

★ ★ ★

டாக்டர் அம்பேத்கார் உருவச்சிலை அமைப்பு நிதிக்காக

சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில்

19-4-58 சனி மாலை
6-30 மணிக்கு

அறிஞர் அண்ணு
அவர்கள் முன்னிலையில்

இராதாமணுளன் தீட்டிய

"மூடுபனி"

— நாடகம் நடைபெறும் —

நுழைவுக் கட்டணம் :
ரூ. 5, 2, 1, அணு 8

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

இந்த ஜனநாயகத் தத்துவம் திருவாடானைத் தொகுதி மக்களுக்குத் தெரியாமற் போய் விட்டது. ஆனல் டார்ரிங்டன் டெவன் மக்கள் அதை நிறைவேற்றிக் காட்டினுர்கள். ஜனநாயகத்தின் பிறப்பிடமான பாராளுமன்றத்தின் தாயான--- பிரிட்டனில் ஜனநாயகம் தழைத்தோங்கி நிற்பதில் வியப்பேதும் இல்லை. நம்நாட்டு மக்கள்--- ஜனநாயகத்தின் முதற்படியில் இருப்பவர்கள்---இனியேனும் இத்தகைய கோட்பாடுகளை நன்குணர்ந்து—தங்கள் தங்கள் கடமைகளைத் தேர்தல் காலங்களில் செய்வார்களாக.

—நா. ஜகந்நாதன், எம். ஏ.

மே முதல் நாளில் எங்கும் கிடைக்கும்!

முல்லை

சிறப்பு மலர்

செந்தமிழ்க் கருவூலம் - சித்திரக் கூடம்
கருத்துக் களஞ்சியம் - கொள்கை முரசு

கண்ணைக்கவரும் வண்ணமுகப்பு, கருத்தை ஈர்க்கும் மூவண்ணப் படங்கள், எழில்மிகுந்த புகைப்படங்கள், இணையற்ற கேலிச் சித்திரங்கள் எல்லாம் நிறைந்த

முல்லை—சிறப்பு மலரில்

ஆசிரியர் கண்ணதாசன் எழுதும்

அழகி — சிறப்புக் கவிதை

மற்றும்

| | |
|---|---|
| அறிஞர் அண்ணு | தில்லை-மறைமுதல்வன், எம். ஏ. |
| நாவலர் நெடுஞ்செழியன் | பெரி. சிவனடியான், பி. ஏ. |
| பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் | வ. சம்பந்தன், பி. ஏ. |
| மொழித்துறைமுனைவர் ஞா. தேவநேயப்பாவாணர் | டி. கே. சீனிவாசன் |
| டாக்டர் மு. வரதராசனுர் | அகிலன் |
| ,, மா. இராசமாணிக்கனுர் | கம்பதாசன் |
| ,, அ. சிதம்பரநாதனுர் | சுரதா |
| பேராசிரியர் ஔவை சு. துரைசாமி | வாணிதாசன் |
| ,, நா. பாண்டுரங்கன, எம்.ஏ. | கே. ஜி. இராதாமணுளன் |
| ,, சோ. பாகீரதி, எம்.ஏ. | முடியரசன் |
| பி. பா. உமாமகேஸ்வரி எம். ஏ. | இரா. இளஞ்சேரன் |
| தில்லை-வில்லாளன், எம். ஏ. | திராவிடப்பித்தன் |
| கே. ஏ. மதியழகன், பி. ஏ. | ஆ. மாதவன் |
| | மு. சண்முகம் |
| | ப. புகழேந்தி |

மற்றும் பலரின்

கதைகள், கட்டுரைகள், கவிதைகள்

இவற்ருேடு

தமிழ்த் திரைப்பட நாட்டிய நட்சத்திரங்களின்
உருவப்படங்கள்—நடனத்தோற்றில்

மற்றும் பல சிறப்பான அம்சங்கள்.

எல்லாவற்றிற்கும் விலை ரூ. 1 தான்.

விற்பனையாளர்கள் முன்பணம் அனுப்புக!

முல்லை :: சென்னை-6.



[உருது மொழியில் கவிக்குயில் இக்பால் எழுதிய கவிதையின் மொழிபெயர்ப்பு.]

# புதுக்கோவில்

ஆலயத்தை அணிசெய்யும் சிலைகள் எல்லாம்
ஆரியனே வெறுங்கற்கள் பழைய கற்கள்
காலத்தின் சுழற்சியிலே கிடந்து வாடும்
களங்கத்தின் அவதாரம், அறியா மையின்
மூலவுரு, பகுத்தறிவின் பகைவன், மக்கள்
மனத்திரையில் குடிகொண்ட விலங்கு ணர்ச்சி
ஞாலத்தில் மற்றோரை ஏய்த்து வாழும்
நரிக்கூட்டம் ஒளிந்துகொள்ளும் மாயப் போர்வை.

உடன்பிறந்தார் சுற்றத்தார் நண்பர் என்ற
உணர்ச்சியினைக் குழிதோண்டி புதைத்து விட்டு
அடர்காட்டு விலங்கினம்போல் நாட்டு மக்கள்
அனைவரையும் வெறுக்கின்றாய், ஒதுக்கு கின்றாய்
கடவுளெனும் பெயர்கூறி வணங்கும் அந்தக்
கற்சிலைகள் உனக்கீந்த பாடம் யீதோ
மடமகனே! அறிவிலியே! வேண்டாம், மக்கள்
மன்றத்தை வெறுக்காதே; நட்பு கொள்வாய்.

நீண்டமுடி வான்முட்ட நிமிர்ந்தி ருக்கும்
நெடுமாடக் கோவிலிலே குடியி ருக்கும்
ஆண்டவர்கள் மக்களுக்குப் பேத மென்னும்
அரிச்சுவடி கற்பித்தார் அதனா லன்றோ
தாண்டவனைத் திருமாலைத் திரையில் தள்ளித்
தமக்குள்ளே பகையென்னும் தீயை மூட்டி
ஆண்டாண்டு காலமுதல் அதிலே வீழ்ந்து
அலறுகிறார் துடிக்கின்றார் அஞ்சு கின்றார்,

இத்தகைய ஆண்டவனின் பாதந் தன்னை
இறைஞ்சாமல் இருப்பதுவே நன்றென் றெண்ணி
முத்திபெற யாத்திரையும் செல்வ தில்லை
முணுமுணுத்து மூலையிலே அமர்வ தில்லை
தித்திக்கும் அடியவரின் சொல்லைக் கேட்கத்
திசையெட்டும் தேடிநிதம் அலைவ தில்லை
முத்திறத்தால் மற்றோரைத் தீங்கு சூழா
முறையொன்றே நன்றென்று நம்பு கின்றேன்.

கற்களிலே கோவிலிலே கடவுள் நின்று
களிநடனம் புரிகின்றார் என்று நீயும்
சொற்களிலே அழகாக வடித்துக் காட்டி
திறமோங்க அருளோங்கச் செப்பு கின்றாய்
கற்களிலே கோவிலிலே கடவுள் இல்லை
கற்கண்டும் கனிச்சாறும் ஒன்றாய்ச் சேர்த்த
நற்சாற்றின் சுவைபோன்ற எந்தன் நாட்டின்
நதியெல்லாம் மணலெல்லாம் கடவுள் தானே!

அறியாமை இருள்போக்கி வேற்று மையின்
அலங்கோலத் திரைநீக்கி மக்கள் எல்லாம்
முறையாக வாழ்வதற்கு வழிவ குக்கும்
முன்னேற்றப் பாதையினை அமைப்போம், அங்கே
குறைமதிக்கும் தீண்டாமை என்னும் பேய்க்கும்
கிஞ்சித்தும் இடம்தாரா நெறியைக் காப்போம்
அறிவுக்கும் செயலுக்கும் பாலம் போடும்
அறநெறியைப் பின்பற்றி வாழ்வு கொள்வோம்.

இசைக்காத வீணையைப்போல் பன்னா ளுண்டாய்
இருள்சூழ்ந்த புவிமக்கள் இதயந் தன்னில்
நசைபோக்கி அன்பென்னும் நன்னீர் பாய்ச்சி
நானிலத்திற் கருள்புரியும் பயன்ம ரத்தை
திசைஎட்டும் கிளைபரப்பி வளரச் செய்யும்
சீரான நெறியைமேற் கொள்ள வேண்டும்
வசைபாடி வாழ்ந்தகாலம் போதும் இன்றே
வாழ்நாளின் இன்பத்தை நுகர்வோம் வாரீர்,

உள்ளத்தில் புதுக்கோவில் ஒன்ற மைத்து
உலகத்தின் சிறப்பிடமாய் ஆக்க வேண்டும்
தெள்ளமுதும் தேன்மழையும் பொழியும் அன்பின்
திருவிடமாய் அவ்விடத்தை மாற்ற வேண்டும்
வெள்ளம்போல் நன்மக்கள் கூட்டம் அங்கே
விரைவாக வரவேண்டும், கொள்கை பெற்று
எள்ளளவும் மாசில்லா உள்ளத் தோடு
இன்பத்தின் ஆழியிலே நீந்த வேண்டும்.

—துறையூர். ந. அலி

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

'தம்பி! பொற்குடம் உடைந்தால் எஞ்சியிருப்பது பொன்! மட்குடம் உடைந்தால் எஞ்சியிருப்பது மண்!''

எஞ்சி நின்ற பொன்னுக்கு விலை மதிப்பு உண்டு. மண்ணுக்கு என்ன மதிப்பு உண்டு? அது மண்ணேதான்!

தமிழறிஞர்கள் தம் நூல்களில் நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களைச் சிறப்பித்துப் பேசுகிறார்கள். குடிப்பிறப்பு என்று அப்பண்புபோற்றப்படுகிறது. பெரிய குடியிற் பிறந்தவர்கள் நலிவு வந்த காலத்திலும், தங்கள் குடிப்பண்புகளை நெகிழவிடமாட்டார்கள். தங்கள் நிலையிலிருந்தும் அவர்கள் தாழமாட்டார்கள். அவர்கள் வளத்திலும் வறுமையிலும் மேன்மக்களாகவே விளங்குவர்.

மட்குடத்திற்கும் பொற்குடத்திற்கும், அவை உடையாமல் நல்ல குடமாக விளங்குகிற காலத்திலும், மதிப்பில் நிறைய வேறுபாடு உண்டு. மட்குடத்தின் விலை மிக மிகக் குறைவு. பொற்குடத்தின் விலை மிக மிக அதிகம். யானைக்கும் பூனைக்கும் உள்ள வேற்றுமை.

கீழ் மக்களுக்கும் மேன்மக்களுக்கும் உள்ள வேறுபாடும் இத்தகையதுதான். இருவரும் நல்ல செல்வ நிலையில் இருக்கும் காலத்திலும் யானையும் பூனையும் போன்றவர்களே. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு அப்போதும் அவர்களுக்கிடையே உண்டு.

செல்வம் நிறைந்திருக்கும் காலத்தில், பொற் குடத்தைப் போன்ற உச்ச உயர்வுடையவர்கள் மேன்மக்கள்-அவர்கள் மதிப்பும் பெரிது, பயனும் பெரிது.

செல்வம் நிறைந்திருக்கும் காலத்தும், மட் குடத்தைப் போன்ற தாழ்ந்த மதிப்பே கீழ் மக்களுக்கு உண்டு. மேன்மக்களை நோக்க, அவர்கள் பயனும் மதிப்பும் மிக இறக்கம்.

செல்வம் சேர்ந்திருப்பதன் காரணமாக மட் குடத்தைப்போலக் கீழ்மக்களுக்கு, அற்பர்களுக்கு ஓரளவு மதிப்பும் செல்வாக்கும் உண்டு. அந்தச் செல்வம் போய்விட்டாலோ, அங்கே மிஞ்சுவது வெறுமை, செல்வம் ஒன்றினால் மதிப்புப் பெற்ற அற்பர்கள், வறுமையில் அந்த மதிப்பை அடியோடு இழந்து விடுவது இயல்பே.

ஆனால் மேன்மக்களின் நிலை வேறு. மேன்மக்கள் இயல்பாகவே மதிப்புள்ளவர்கள். செல்வம் சேரும்போது பொற்குடத்திற்குப் பொட்டு இட்டதுபோல அவர்கள் மேலும் ஒளி வீசுகிறார்கள். அந்தச் செல்வம் போய்விட்ட காலத்தும் அவர்கள் தம் இயல்பான மேன்மைக் குணம், மாறாமல் மறையாமல் அவர்களிடம் நிறைந்திருக்கும்.

பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகவே மிளிர்வது போலக் கெட்டாலும் மேன்மக்கள் பண்பில் திரியாமல் சீரியராகவே காட்சியளிக்கிறார்கள்.

செல்வச் சிறப்பு மேன்மக்களைப் பொற்குடமாகத் திகழச் செய்கிறது. அச்செல்வச் சிறப்பு ஒருகால் நீங்கிவிட்டாலும், உடைந்த பொற்குடம்போலப் பொன்னாகவே அவர்கள் பண்பு நீடிக்கிறது.

சந்தனக்கட்டைதான் தேய்ந்த காலத்தும் கந்தம் குறைவுபடாது; அட்டாலும் பால் சுவையில் குன்றாது; சங்கு சுட்டாலும் வெண்மைதரும்; பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும். சீரியர், மேன்மக்கள், தார்வேந்தர் ஆகியோர் வறுமையினால் பண்பு கெடமாட்டார். குடிப்பிறப்புக்குள்ள அடிப்படை இயல்பு இது.

பொற்குடம், மட்குடத்தை மேன்மக்களுக்கும் கீழ்மக்களுக்கும் உவமைகளாகக் காட்டிய ஔவையார் மற்றொரு நயத்தையும் நாம் உய்த்துணர வைத்திருக்கிறார்.

உடைந்துவிட்ட பொற்குடத்தை மீண்டும் உருவாக்க முடியும். மட்குடத்தை அவ்வாறு உருவாக்க முடியாது.

உடைந்துபோன பொற்குடத்தை உருக்கி மீண்டும் அருமையான பொற்குடத்தைச் செய்துவிடமுடியும். மண்ணின் குடம் உடைந்துபோனால் அந்தச் சில்லுகளை உருக்கி ஒன்று சேர்த்து மீண்டும் குடம் பண்ண முடியுமா? ஒருபோதும் முடியாது.

அதுபோலவறுமைவாய்ப்பட்ட கீழ்மக்கள் மீண்டும் உருப்பட வாய்ப்பே இல்லை; அவர்கள் உருத்தெரியாமல்அழியவேண்டியதுதான்.

மேன்மக்களுக்கோ வறுமையினின்றும் மீள, மீண்டும் செல்வ நிலை எய்த வாய்ப்புண்டு. பொற்குடத்தைப்போல அவர்கள்மீண்டும் வாழ்வு பெற முடியும்; வளம் பெற முடியும்.

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே! சீரியர் கெட்டாலும் சீரியரே! பொன்னின் குணம் போமா? பூவின் மணம் போமா?

★

(மலாயா வானொலி தமிழ்ப் பள்ளிக் கூடப் பகுதியில் 14-3-58 அன்று ஒலிபரப்பப்பட்டது).

வெளிவந்து விட்டது!

தென்றல் வெண்பா
1000

விலை ரூபாய் 2-50.

விபரங்கட்கு:
மலர் நிலையம், 133, பிராட்வே, சென்னை-1.

198380



# வெண்பாப் போட்டி

## 15. நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

★ சேய்க்குநான் தந்தை சிலநொடியில்! வீட்டுக்குள்
தாய்ஆகும் அன்னம் தவிக்கின்ருள் — நோய் இழைக்கும்
பாரத்தின் தொல்லையினுல்! என்செய்வேன் பாழான
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—கா. வேழவேந்தன், காரணிஊர்.

சந்தனமும் செந்தழலோ சந்திரனும் வெம்பகையோ
வந்ததென்றல் காற்றும் வடநெருப்போ—எந்தலைவர்
தூரத்தே சென்றதனுல் தொல்லையுள இம்மாலை
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

பள்ளிக்குச் சென்றுயான் பாடம் படிப்பித்து
துள்ளுதமிழ் நெஞ்சோடு இல்ஏகி—"பள்ளியறைப்"
பாடத்தைச் சொல்லுகையில் பண்பரசி எங்குசென்ருள் "
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—ஓடை. இரா. வடிவேலன், பேரோடு.

ஒன்றைப் பலவாக்கி ஊரறியச் செய்திடுவார்
என்றும் சுயநலத்தோ டின்புறுவார் — குன்ருது
ஈரமிலா நெஞ்சர்க் கியல்பாக வாய்த்தநல்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—சி. பி. சாமி, திருப்பத்தூர் (வ. ஆ.)

அன்றிருந்த வாழ்வு மரசிருந்த தீந்தமிழும்
என்றுவரு மென்றே ஏங்கற்க — இன்றிருக்கும்
சீர்கெட்டோர் வாழ்வைச் சிதைக்காது வீண்போகும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—கண்ணகி, உடுமலை.

தங்கக் குடமேந்தி தண்ணிக்குச் செல்பவளே!
பொங்கும் எனதாசை பாராயோ — தங்காமல்
நேராக வந்துவிடு நீயின்றி நானிருக்கும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

காதலர் வாராத, கன்றுபசி ஆருத,
தீதாம் மொழிச்சுவையும் தீராத,—பாதகரின்
கோரமிகு சூழ்ச்சிக் கொடுமை தணியாத
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—தாம்பரக்கிழான், சென்னை.

தேனூறும் செவ்விதழும் தேர்ந்த உடலழகும்
மானுர் விழியும் மதிமுகமும்—மானே நீ
வாராது போனதனுல் மங்கிற்றே மாலையெனும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—ஏ. ராமமூர்த்தி, மணப்பாறை.

பூவிழந்து மையழிந்து பூணும் அணிமறந்து
கூவி அழுகின்ருள் கொம்பிழந்தே! — ஆவியான்
மாரடைப்பால் மாண்டான் மணவரையில்; நாள்குறித்த
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—பனை. சண்முகம், நெற்குப்பை.

வீரத்தால் தீரத்தால் வீறுதமிழ்ச் சாரத்தால்
பாரகத்தை ஆண்ட பழந்தமிழன் — வேரற்றுக்
கோரநிலை யுற்றுக் கொடுமை பலபெற்ற
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

— த. நடராசன், காமாட்சிபுரம்.

யாராலும் நம்காதல் மாயாது மான்விழியே!
சீராய் மணமுடிப்பேன் என்றுசொல்லி—வாராமல்
ஆரத் தழுவியே அன்றுசென்ருர் நீட்டிக்கும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—ச. சுப்புசாமி, புதுப்பட்டி.

மாலைப் பொழுதுக்குள் வந்திடுவேன் என்றுசென்ற
காளை அவனின்னும் காணுமே—தோழி! என்
ஆருத் துயர்துடைக்க ஐயோ எனைவாட்டும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—குகன்குருசாமி, கமுதி.

நிற்கும் நெடுஞ்சுவரில் நீள்விரலால் கோடிட்டு
கற்கப் பிரிந்தார்க்கே காத்திருந்தேன் — பொற்கொடியே!
ஆரத்தைப் பெற்றுவிட்டேன் அந்திவரை காத்திருக்கும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—ப. கணபதி, சோழபுரம்.

செந்தமிழர் நாட்டைத், தமிழைத், தமிழ்காத்த
முந்தைப் பழங்குடியை மெய்ப்புகழை—எந்தன்வாள்
வீரத்தால் காவாது மண்ணின்மேல் வீணுகும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—ந. அலி, துறையூர்.

மெல்லிய பூங்காற்று மேனியிலே வீசுங்கால்
நல்லொளியை வான்மதியம் நல்குங்கால்—வல்லியவள்
ஆரத் தழுவி அகமகிழ இல்லையெனும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—ஆ. அப்பாதுரை, சோழபுரம்.

காரில் வருகின்றேன் கண்ணுட்டி என்றுரைத்துத்
தேரினிலே சென்ருரே தேன்மொழியே—தேரிலவர்
தூரத்தே வாராரா பார்தோழி பார்அந்தி
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—மருதாசலம், குமாரநகர்.

சோறுங் கறியும், சுவையுள்ள தாங்குழம்பும்,
சாறும் பசுந்தயிரும், சத்துள்ள — ஊறுகாயும்
சேர விருந்தளித்த செந்தமிழர் கையேந்தும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—அகரப்பேட்டை-தொல்காப்பியன்.

பிஞ்சனைய நெஞ்சாளை கொஞ்சும் குயிலாளை
பஞ்சனைய மென்தோளைப் பாராயோ? — துஞ்சும்
நேரிழையின் துன்பத்தை நீயறியாய் ஏகாத
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—தமிழ்எழிலன், கடையநல்லூர்.

★ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு "தென்றல்" சந்தா.

**பாரிஸ் அழகிகள்**
கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10. 24 படங்கள் ரூ. 7. முன் பணம் அனுப்புக. தபாற்செலவு இலவசம். சாம்பிள்கள் கிடையாது
வீனஸ் டிரேடிங் கம்பெனி (தெ.)
தபால் பெட்டி 1693, சென்னை-1.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
ஏஜெ: எ. சங்குபிள்ளை, 11b, திண்டுக்கல்ரோடு. மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு

M241,N54TL
N57.4.40